பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 07 2026 WEDNESDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

- தில்லியில் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டத்தை எதிர்கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக் கொள்வதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

- தமிழகத்திற்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது குறித்து வரும் 28ஆம் தேதி முடிவு செய்யப்படும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

- Hormuz நீரிணையில் தடையற்ற வர்த்தக கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

- அமெரிக்க சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

நீட் தேர்வு கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானது மற்றும் தில்லியில் நடைபெற்று வரும் மாணவர்கள் போராட்டம் தொடர்பாக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவையில் பலமுறை ஒத்தி வைக்கப்பட்ட பிறகு, பிற்பகல் 3 மணிக்கு அவை கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த கூட்டத்தொடரின் முதல் நாளிலிருந்தே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அரசு தயாராக இருந்ததாக தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளை முடக்கும் முயற்சியை தவிர்த்து, ஆக்கபூர்வமாக விவாதித்தால், அரசு தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்படும் என்று அவர் கூறினார்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.

அவை முன்னவர் திரு. ஜெ.பி. நட்டா, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மாண்புகளுக்கும், ஜனநாயக நடைமுறைகளுக்கும் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பற்ற முறையில் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, நீட் தேர்வு விவகாரம் மற்றும் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு பொறுப்பேற்று, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து அமளி நீடித்ததால், மாநிலங்களவையும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>><<<<<<

மாணவர் அமைப்பினர் தில்லியில் நடத்தி வரும் போராட்டத்தை சில அரசியல் கட்சிகள் தங்கள் சுயலாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

மாணவர்கள், அரசியல் கட்சிகளின் தூண்டுதலின்றி தங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தால், அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டில் 162 வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துபூர்வமாக அவர் அளித்த பதிலில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட வந்தேபாரத் ரயில்கள் பயணிகளுக்கு பாதுகாப்பு மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சேவை, ஹவுரா - காமாக்கியா இடையே கடந்த ஜனவரி மாதம் தொடங்கப்பட்டதாக அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பாதுகாப்பை வலுப்படுத்தவும், ரயில்பாதை மற்றும் ரயில் நிலையங்களுக்கான கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுத்துறையில், இந்தியா - Lesotho நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஸ்காட்லாந்தின் Glasgow நகரில் Lesotho விளையாட்டுத்துறை அமைச்சர் Mputi Stephen-னுடன் ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

விளையாட்டு அறிவியல். பயிற்சி, உடற்கல்வி, விளையாட்டு கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அந்நாட்டிற்கு உதவி அளிக்க இந்தியா தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, திரு. மன்சுக் மாண்டவியா காமன்வெல்த் விளையாட்டு சங்க தலைவர் டாக்டர் Rukare-ருடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2030ஆம் ஆண்டில் இந்தியாவில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்து ஆலோசித்ததாக கூறினார்.

>>>>>><<<<<<

இந்தியா – கனடா நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் QUAD அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள கனடாவின் வெளியுறவு அமைச்சர் திருமதி. Anita Anand-ஐ சந்தித்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசித்ததாக தெரிவித்துள்ளார்.

இருநாட்டு பிரதமர்களும் நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து தாங்கள் விவாதித்ததாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கடந்த இரண்டாண்டுகளில் ஆபாச படங்களை வெளியிட்ட 50 OTT தளங்களை மத்திய அரசு முடக்கியதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அவர் அளித்த எழுத்துபூர்வமான பதிலில், மின்னணு ஊடக வழிகாட்டு நெறிமுறைகளை மீறி, இந்த இணையதளங்கள் செயல்பட்டதாக குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்திற்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசு மறுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற 53வது காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், பெங்களூரு நகரின் குடிநீர் தேவை மற்றும் அணைகளின் நீர் இருப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு, இந்த முடிவை கர்நாடகா எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, கர்நாடகாவில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளின் மழைப்பொழிவு மற்றும் அம்மாநிலத்தில் உள்ள அணைகளின் நீர்இருப்பு குறித்து ஒரு வார காலத்திற்கு கண்காணிக்கப்படும் என்று ஆணையம் கூறியது.

இரு மாநிலங்களும் முன்வைத்துள்ள கருத்துகள் குறித்து, வரும் 28ஆம் தேதி நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலின் போதிலும், Hormuz நீரிணை வழியாக தொள்ளாயிரம் வர்த்தக கப்பல்கள் பாதுகாப்பாக சென்றுள்ளதாக அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது.

அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த கப்பல்கள் மூலம் 45 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது.

ஈரான் கடந்த மூன்று மாதங்களில் 30 வர்த்தக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக கூறியுள்ளது.

ஈரானின் பல்வேறு பகுதிகளில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியதாக ஈரான் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

Chavar, Abdanan, கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தில் உள்ள Tabriz உள்ளிட்ட இடங்களில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையேயான அமைதி ஒப்பந்தம் தோல்வியடைந்ததையடுத்து, அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

Hormuz நீரிணை, ஈரானின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அனுமதித்தால், தடையற்ற வர்த்தக போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்று வரும் ஆசியான் மாநாட்டில் உரையாற்றிய அவர், கடந்த மாதம் அமெரிக்கா - ஈரான் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தை ஈரான் மீறியுள்ளதாக குற்றம்சாட்டினார்.

மேற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

Hormuz நீரிணை பகுதியில் தடையின்றி வர்த்தக கப்பல்களை இயக்க நடவடிக்கை மேற்கொள்வதன் அவசியம் குறித்து திரு. மார்கோ ரூபியோ வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

சிக்கிம் மாநிலம் Namchi மாவட்டத்தில் நீர் மின் திட்டத்திற்கான சுரங்கப்பாதை பணியின் போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் மற்றும் சுரங்கப்பணி நிபுணர்கள் இணைந்து மேற்கொண்ட பணிகளின் போது, இன்று மேலும் 8 தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

சுரங்கத்தில் போதிய வெளிச்சமின்மை, இடிபாடுகள் மற்றும் மீத்தேன் வாயுக் கசிவு காரணமாக மீட்புப் பணிகள் சவாலாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பத்துக்கும் மேற்பட்டோரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>>><<<<<<

அமெரிக்க சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-4 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Billy Harris-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 9-21, 21-10 என்ற செட்கணக்கில் Unnati Hooda-வை வென்றார்.

>>>>>>END<<<<<<